2000 ஏப்ரல் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அதை விடுங்கள்; நான் சொல்கிறேன், நீங்கள் ஆர்.எஸ்.எஸ்.-ஐப் பற்றி ஒரு கருத்தைச் சொன்னீர்கள். அவர் தன்னிலை விளக்கம் கொடுக்க வேண்டும் என்கிறார். நான் அனுமதி கொடுத்து இருக்கிறேன். இதிலே என்ன தப்பு? திரு. வேலாயுதன் சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைப் பொறுத்தவரையில் குறித்த நேரத்தில் துவங்கி, எந்த வழியாகச் செல்கின்றோம் என்று சொல்லி, அனுமதி பெற்று, அதே வழியாகச் சென்று, குறித்த நேரத்தில் முடிக்கக்கூடிய இயக்கம். இதுவரையில், ஆர்.எஸ்.எஸ்.-னுடைய நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும்போது, ஒரு பிரச்சினை என்றோ அல்லது அந்த நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கும்போது யாரையாவது தாக்கினார்கள் என்றோ இதுவரை சம்பவம் கிடையாது. நேர்மாறாக, தமிழகம் முழுக்க அனைத்து மாவட்டங்களிலும் ஆர்.எஸ்.எஸ். இரத்த தான இலவச முகாம் நடத்திக்கொண்டு இருக்கிறது. டாக்டர் செரியன் போன்ற பெரியவர்கள் அதைப் பாராட்டி இருக்கிறார்கள். அதேபோன்று நாட்டில் பல சம்பவங்கள், அதாவது மோர்தானா அணை உடைந்தபோது; இஸ்லாமியர்களுக்கு என்றே தனியாக அந்த நோன்பு காலத்திற்காக தனியாக முகாம் நடத்தி பாதுகாத்தவர்கள் ஆர்.எஸ்.எஸ். யுத்தகாலத்தில் ஜெனரல் கரியப்பா அவர்கள் பாராட்டி இருக்கின்றார்கள்; ஜவஹர்லால் நேரு அவர்கள் பாராட்டி இருக்கின்றார்கள்; லண்டன் பி.பி.சி. கூட அகில உலக அளவில்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. நீங்கள் அதோடு உங்களுடைய விளக்கத்தை நிறுத்திக்கொள்ளுங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிரத்யேகமான காரணத்தையொட்டி இந்தக் கவன ஈர்ப்பைத் தாங்கள் அனுமதித்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால், தங்களுடைய அறையில் இது பற்றி விவாதிக்கப்பட்டபோது, நான் சொன்ன கருத்து, 'தடை செய்யப்படாத இயக்கங்கள் தமிழ்நாட்டில், ஒரு நிகழ்ச்சியை நடத்துகிற காலத்தில், அந்த நிகழ்ச்சியைத் தடை செய்ய வேண்டுமென்ற நோக்கில் இதுபோன்ற தீர்மானங்களைக் கொண்டு வருவது என்றால், இந்தக் கவன ஈர்ப்புக்கு அல்லது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு உள்ள மதிப்பு credit குறைந்துவிடும், எனவே, இதை

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 ஏப்ரல் 12

நீங்கள் பேசும்போது வேண்டுமானாலும் குறிப்பிடுங்கள்; பல மானியங்களிலே பேச வேண்டிய சந்தர்ப்பங்கள் வரும்போது குறிப்பிடுங்கள்; இதை ஒரு கவன ஈர்ப்பாகவோ, ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ கொண்டுவரத் தேவையில்லை' என்று சொன்னேன்.

ஆனால், எப்படியோ, சுப்பராயன் அவர்கள் அவர்களுக்குள்ள திறமையின் காரணமாக, இந்தப் பிரச்சினையை அவையில் எடுத்து வைத்து சில கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைப் பற்றி என்னுடைய கருத்து என்ன என்பது நாட்டிற்கு நன்றாகத் தெரியும். இன்றைக்குக்கூட ஏதோ, நான் அதை சமுதாய இயக்கம் என்று சொன்னதாகச் சொல்லி, ஒரு குற்றச்சாட்டை என்மீது சுமத்தி, என்னை ஆர்.எஸ்.எஸ். என்றே சுட்டிக்காட்டுகிற நிலைமை இருக்கிறது. அதையெல்லாம் அரசியலுக்காக நிறையபேர் செய்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும் என்னைப் பற்றி. நாத்திகம் பேசுகின்ற நாத்திகர்களைவிட நான் நல்ல நாத்திகன் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் அறிவார்கள்.

ஆர்.எஸ்.எஸ். சமுதாய இயக்கம் என்று நான் எந்தச் சூழ்நிலையிலே சொன்னேன்? முதலில் உள்ள வாக்கியத்தையும் அடுத்து வருகிற வாக்கியத்தையும் விட்டுவிட்டு, 'சமுதாய இயக்கம்' என்று சொல்லிவிட்டார் என்று குறிப்பிட்டார். சமுதாய இயக்கம் என்றால் எந்தச் சமுதாயத்தினுடைய இயக்கம் என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போது— ஒவ்வொரு சமுதாயத்திற்கு ஒரு இயக்கம் இருக்கும். இரண்டு சமுதாயங்களுக்கிடையே ஒற்றுமைகள், வேற்றுமைகள் இருக்கலாம். ஏதோ ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காக பாடுபடுகின்ற இயக்கம் என்கிறபோது நான் சொன்னேன். 'திராவிடர் கழகம்' போல என்று சொல்ல முடியாது. திராவிடர் கழகம், ஆர்.எஸ்.எஸ். இரண்டிற்கும் மகத்தான வேறுபாடுகள் உண்டு, முரண்பாடுகள் உண்டு. நான் திராவிடர் கழகத்திலிருந்து வந்தவன் என்று சொன்ன பிறகும்கூட ஆர்.எஸ்.எஸ். முத்திரையை எப்படியாவது எனக்கு குத்த வேண்டுமென்று பல பேர் கருதுகிறார்கள்.

நம்முடைய வேலாயுதன் அவர்கள் ஆர்.எஸ்.எஸ்.னுடைய தூய்மை, ஆர்.எஸ்.எஸ்.னுடைய நேர்மை இவற்றைப் பற்றிப் பேச அவருக்கும் உரிமை உண்டு. இந்தியாவிலே, பெரிய ஜனநாயக நாட்டில் அவரவர்களுக்கும் பல உரிமைகள் உண்டு. அந்த உரிமைகளில் தலையிட யாருக்கும் நியாயம் கிடையாது.

2000 ஏப்ரல் 12] [கலைஞர் மு. கருணாநிதி]

கோயம்புத்தூரில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் இது தடை செய்யப்பட்ட இயக்கம் அல்ல என்ற காரணத்தாலும், ஜனநாயகத்திலே எந்த ஒரு கட்சினுடைய ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்துவதாக இருந்தாலும், அவ்வப்போது உள்ள சூழ்நிலைகளை எண்ணிப் பார்த்து, அன்றைக்கு உள்ள சூழ்நிலையை எண்ணிப் பார்த்து, கடந்த காலத்தில் நடந்தது, எதிர்காலத்திலே நடக்கும் என்பதையெல்லாம் அனுமானிக்காமல், அன்றுள்ள சூழ்நிலையை எண்ணிப் பார்த்து உரிமைகளை வழங்குவது என்பது காவல் துறையினுடைய கடமையாக இருந்து வருகிறது. இதுபற்றி முதலிலே, கோயம்புத்தூரிலே உள்ள காவல் துறை அனுமதி வழங்குவதற்கு முன்பு, ஒரு வேளை அனுமதி வழங்க மாட்டார்களோ என்கின்ற கருத்தோடு என்னிடத்திலே வந்து சில தலைவர்கள் பேசினார்கள். இந்த அனுமதி வழங்கப்பட வேண்டுமென்றெல்லாம் கேட்டார்கள். நானும் கோயம்புத்தூர் என்ற காரணத்தால் பல இடையூறுகள் வரக் கூடுமே என்று எடுத்துச் சொன்னதுண்டு. ஆனால் அவர்களெல்லாம் என்னிடத்திலே உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். அமைதியான முறையில் நடத்துகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இங்கு அனுமதியே கொடுக்கப்படவில்லை என்று லத்தீப் அவர்கள் சொன்னார்கள். அது தவறு. எனக்கு வந்த தகவல் அவர்கள் 3 இடங்களிலே அனுமதி கேட்டார்கள். 3 இடங்கள் வழியாக ஊர்வலம் செல்ல. ஒரு வழிதான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று தகவல் வந்திருக்கிறது. அனுமதியை அங்குள்ள போலீசார் கொடுக்காமல் இருந்திருந்தால் நிச்சயமாக அந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனுமதி கொடுத்திருக்கும்பட்சத்தில் ஜனநாயக நாட்டில் இவற்றையெல்லாம், தடை செய்யப்படாத ஒரு இயக்கத்தினுடைய நிகழ்ச்சியைத் தடுப்பது என்பது இயலாத காரியம். எல்லா வகையிலும் அமைதியாக நடைபெற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். எல்லோரும் ஒத்துழைப்போம் என்கின்ற அந்த உறுதியையும் நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, உத்தரவாதம் அளித்தவர்களும் உத்தரவாதத்திற்கு ஏற்றபடி நடந்துகொள்வார்கள் என்ற எதிர்பார்ப்போடு அமர்கிறேன். (குறுக்கீடு)